### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சொன்ன "மின்வெட்டு – அரிவாள் வெட்டுக்கிடையேதான் போட்டி" என்பது நிரூபணம்!

# தமிழகத்தில் ஒரே வாரத்தில் 22 படுகொலைகள்!

## ரத்த ஆறாக ஓடிய சாலைகள்! அதிர்ச்சியில் உறைந்த மக்கள்!

## நிர்வாகத் திறனற்ற விஜய்! சிரிப்பாய் சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

**சென்னை, செப். 25 -**

**ஒரே நாளில் எட்டுக் கொலை', 'காவல் நிலையத்துக்கு அருகே ஓட ஓட விரட்டி வெட்டிக் கொலை', 'ஆள் மாறாட்டத்தில் இரட்டைக்கொலை', 'கல்லூரி மாணவருக்கு அரிவாள் வெட்டு... இதெல்லாம் கடந்த ஒரு வாரத்தில் பத்திரிகைகளை ரத்தக்கறையாக்கிய செய்திகள். சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால், தமிழ்நாடே கொலைக்களமாக மாறிப்போயிருக்கும் சூழல் உருவாகியிருக்கிறது. தி.மு.க. தலைவர் ஸ்டாலின், "இந்த ஆட்சியில் இரண்டே இரண்டுக்கு நடுவுலதான் போட்டியே... ஒண்ணு மின்வெட்டு, இன்னொண்ணு அரிவாள் வெட்டு..." என்று த.வெ.க. ஆட்சியைப் போட்டுத் தாக்கியிருக்கிறார் என்று 'ஜூனியர் விகடன்' 27,09,2026 தேதியிட்ட இதழில் சிறப்புக் கட்டுரை எழுதியுள்ளது.**

அக்கட்டுரை வருமாறு :-

அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் என எதிர்க்கட்சித் தலைவர்கள் பலருமே, சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பதாக விமர்சித்திருக்கின்றனர். "அந்த அளவுக்கா சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது?" என்ற கேள்வியுடன் விசாரணையில் இறங்கியது ஜூ.வி. டீம். செப்டம்பர் 14ம் தேதி தொடங்கி 20ம் தேதி வரை முன்பகை காரணமாகவும், அடிதடிப் பிரச்னையிலும் தமிழகத்தில் நடந்த கொலைகள் குறித்து மட்டும் விசாரித்தோம். கிடைத்த தரவுகள் நம்மை தூக்கிவாரிப் போடவைத்தன. அந்த ஏழு நாள்களில் நிகழ்ந்த 22 படுகொலைகள் தமிழகத்தையே அதிரச் செய்திருக்கின்றன.






**ரத்தக்களறியாகும் முன்விரோதக் கொலைகள்!**

தூத்துக்குடி கே.சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளி கணேஷ்குமாருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த சில கட்டடத் தொழிலாளிகளுக்கும் முன்விரோதம் இருந்திருக்கிறது. செப்டம்பர் 14ம் தேதி மது அருந்தியபோது, கணேஷ்குமாருக்கும் எதிர்த்தரப்பினருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டு, கத்தியால் அவரது உடலில் ஆங்காங்கே குத்தியும், கல்லால் தாக்கியும் கொலைசெய்துவிட்டனர். அவரது உடலை, சாலை விரிவாக்கப் பணிக்காகத் தோண்டப்பட்ட பள்ளத்தில் போட்டுவிட்டு, தப்பியோடிவிட்டது கொலைகாரக் கும்பல். இது தொடர்பாக மூன்று பேர் கைதுசெய்யப்பட்ட சூழலில், "முன்விரோதம் காரணமாகவே கொன்றோம்" என்று வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள் கொலை செய்தவர்கள்.

திருச்சி மாவட்டம், சமயபுரம் நான்கு ரோடு பகுதியிலுள்ள டாஸ்மாக் கடையில், யார் முதலில் மது வாங்குவது என்ற போட்டியில் தகராறு ஏற்பட்டு, மருதூரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி பிரகாஷ் கொல்லப்பட்டிருக்கிறார். அதேநாளில், அதே போன்றதொரு மது அருந்தும் தகராறில் அடையாளம் தெரியாத ஒரு கூலித் தொழிலாளி பீர் பாட்டிலால் தாக்கப்பட்டு சத்தியமங்கலத்தில் கொலைசெய்யப்பட்டார். கோவை மாவட்டம், காரமடையில் பணம் கொடுக்கல், வாங்கல் காரணமாக எழுந்த தகராறில், டேனியல் என்பவர் கொல்லப்பட, அவரைக் கொலைசெய்த அல்ட்ரினைக் கைது செய்திருக்கிறது போலீஸ்.

வேலூர் கம்மவான்பேட்டையைச் சேர்ந்த பள்ளி வேன் ஓட்டுநர் இம்ரான் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவரை வழிமறித்துக் கொன்று வீசியிருக்கிறது ஐந்து பேர் கொண்ட கும்பல். நிலத் தகராறில் இம்ரானுடன் ஏற்பட்ட முன்விரோதத்துக்குப் பழி தீர்த்துக்கொள்வதற்காக ரமீஷ்கான் என்பவர் ஸ்கெட்ச் போட்டுத் தீர்த்துக்கட்டியது போலீஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது. தஞ்சாவூர், பள்ளியக்ரஹாரம் விக்னேஸ்வர் நகரைச் சேர்ந்தவர் வினோத் திவாகர்.



வீட்டில் இருந்த அவரை, செப்டம்பர் 15ம் தேதி நண்பர்கள் சிலர் தகராறு செய்து அழைத்துச் சென்றனர். அன்று இரவு தலை, முகம் சிதைக்கப்பட்ட நிலையில் வயலில் உயிரிழந்து கிடந்தார் வினோத் திவாகர். நடுக்காவேரி போலீஸார் நடத்திய விசாரணையில், மது போதையில் ஏற்பட்ட தகராறில் ஆறு பேர் சேர்ந்து வினோத் திவாகரைக் கொலை செய்தது ஏரியாவையே அதிரச் செய்தது.

**ஆள் மாறாட்டத்தில் இரட்டைக்கொலை!**

சிவகங்கையில் நடந்த இரட்டைக் கொலைதான் ரொம்பவும் கொடூரம். கொடிக்காடு கண்மாய் பகுதியில், செப்டம்பர் 16ம் தேதி தெய்வேந்திரனும், அவருடைய நண்பர் பூப்பாண்டியும் ஒன்றாக அமர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தனர். திடீரென அங்கு வந்த மர்மக் கும்பல், இருவரையும் துரத்தித் துரத்திக் கொடூரமாக வெட்டிக் கொலைசெய்தது. குற்றவாளி களைக் கைதுசெய்யக் கோரி, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட, ஒரு சிறுவன் உட்பட 13 பேரைக் கைதுசெய்தது போலீஸ். விசாரணையில், ஊர்க்காவலன் என்பவரின் கொலைக்குப் பழிவாங்க வந்த இடத்தில், ஆள் மாறாட்டத்தில் இரண்டு பேரைக் கொன்றுவிட்டதாக உண்மையைக் கக்கியிருக்கிறது கொலைகாரக் கும்பல்.

அதேநாளில், திருச்சி துறையூர் அருகே கொட்டத்தூரில், 75 வயது முதியவரான கணேசனை, அவரின் மகனான மணி என்பவர் சொத்துத் தகராறு காரணமாக மரக்கட்டையால் தாக்கியும், அரிவாளால் வெட்டியும் கொலை செய்திருக்கிறார். செப்டம்பர் 17ம் தேதி, ஃபிளெக்ஸ் பேனர் வைக்கும் தகராறில், பாபநாசம் அருகேயுள்ள சத்தியமங்கலத்தைச் சேர்ந்த தளபதியைக் கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறது மூன்று பேர் கும்பல். ஈரோடு மாவட்டம், பவானியில் வயலை உழுவதற்காக வந்த டிராக்டரைத் தடுத்த காரணத்தால், காளநாயக்கர் என்கிற 71 வயது முதியவர் டிராக்டர் ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டார்.

கிருஷ்ணகிரி, பூசாரிப்பட்டிக்கு அருகே டாஸ்மாக் கடையில் ஏற்பட்ட தகராறில் அருண்குமார் என்ற இளைஞரைக் கல்லால் தாக்கிக் கொலைசெய்தனர். இதில், தந்தை மகன் என இருவரைக் கைது செய்திருக்கிறது போலீஸ்.

கன்னியாகுமரி மாவட்டம், காடேற்றி குளத்தில் ஆல்வின் ராஜேஷ் என்ற வாலிபர் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டிருந்தார். போலீஸ் விசாரணையில், சார்லஸ் ஜோஸ் என்பவரின் மனைவியை ஆபாசமாக ஆல்வின் ராஜேஷ் பேசிய காரணத்தால், தன் நண்பர்களுடன் சேர்ந்து மது போதையில் சார்லஸ் கொன்றது தெரியவந்தது.

**காவல்துறை மீதும், சட்டத்தின் மீதும் இந்தக் கொலையாளிகளுக்குத் துளியும் அச்சமில்லை என்பதைத்தான் கள நிலவரங்கள் பிரதிபலிக்கின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவேண்டிய காவல்துறை, 'நமக்கேன் வம்பு...' என்று குறட்டைவிட்டுத் தூங்கி வழிவது, ஆட்சியின் நிர்வாகத்திறனையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது. காவல்துறைக்குப் பொறுப்பான முதல்வர் விஜய்தான், தூங்கி வழியும் காவல்துறையினரைத் தட்டியெழுப்ப வேண்டும். இன்னும் தூங்கிக்கொண்டிருந்தால், சட்டம்ஒழுங்கு சிரிப்பாய் சிரிப்பதோடு, இன்னும் மோசமாகும்!**

**ஒரே நாளில் மதுரையில் 3 கொலை!**

செப்டம்பர் 19ம் தேதி, மதுரையில் நடந்த மூன்று கொலைகள், தூங்கா நகரத்தை அலறச் செய்திருக்கின்றன. ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தின் அருகில், 'ஏ ப்ளஸ்' ரௌடியான சப்பாணியைக் கொன்று வீசிவிட்டது கொலைக்காரக் கும்பல். புஷ்பராஜ் என்பவரைக் கொன்றதற்காக, பழிக்குப்பழியாக புஷ்பராஜின் மகன் பாலமுருகன் 25 வருடங்கள் காத்திருந்து சப்பாணியைக் கொலை செய்திருக்கிறார். இந்த வழக்கில் 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டம், பெருங்குடி பகுதியைச் சேர்ந்த அன்னமயில் என்பவருக்கும், அவருடைய அண்ணன் மகனான ராஜ்குமார் என்பவருக்கும் இடையே இடப் பிரச்னை இருந்திருக்கிறது. இந்தப் பிரச்னை முற்றிய நிலையில், அன்னமயிலை அரிவாளால் வெட்டிப் படுகொலை செய்திருக்கிறார் ராஜ்குமார்.

மதுரை மேலூர் அரசு மேல்நிலைப்பள்ளியின் பின்புறம், தலையில் வெட்டுக் காயங்களுடன் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறார் செல்லதுரை. 'அவரைக் கொலைசெய்தது யார்?" என்பது குறித்துக் காவல்துறையினர் விசாரித்து வருகிறார்கள்.

இந்தக் கொலைத் தாண்டவத்தில், கல்லூரி மாணவரும் தப்பவில்லை. அலங்காநல்லூருக்கு அருகேயுள்ள அ.கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் சஞ்சய்குமார். தன் நண்பருடன் மேலூர் நான்குவழிச் சாலை பிரிவில் சஞ்சய்குமார் சென்றபோது, அவரை வழிமறித்து அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு சிலர் தப்பிவிட்டனர். ரத்த வெள்ளத்தில் தன் நண்பருடன் குமாரம் என்ற ஊரில் தஞ்சமடைந்து, உயிரைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார் சஞ்சய்குமார்.

**குறட்டைவிடும் காவல்துறை... தட்டி எழுப்புவாரா முதல்வர்?**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே கவரமலை வனப்பகுதியில், மரக்கிளையில் அழுகிய நிலையில் ஆண் உடல் தொங்குவதை வனத்துறையினர் கண்டுபிடித்தனர். அடையாளம் தெரியாத அந்த நபர் தற்கொலை செய்துகொண்டாரா... அல்லது கொலைசெய்யப்பட்டாரா என்பதைக் காவல்துறையினர் விசாரித்து வருகின்ற னர்.

கன்னியாகுமரியில் ஆத்திக்காட்டுவிளையைச் சேர்ந்த செல்வி என்ற பெண் கொலை,

நெல்லை மாவட்டம், கீழதேவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் ராம் கொலை, கடலூர் மாவட்டம், கீழ்கவ ரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த ராமு இரும்புத் தடியால் அடித்துக் கொலை, சென்னை வண்ணாரப்பேட்டையில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் சரவணன் என்பவர் கழுத்தை அறுத்துக் கொலை என்று



ஒரு வாரத்தில் தமிழகம் முழுவதும் கொலை வழியே ரத்தம் ஆறாக ஓடியிருக்கிறது. ஏழு நாள்களில் 22 கொலைகள் நடந்திருப்பதெல்லாம், சட்டம் ஒழுங்கு சீர்கேட்டின் உச்சம்தான்.

காவல்துறை மீதும், சட்டத்தின் மீதும் இந்தக் கொலையாளிகளுக்குத் துளியும் அச்சமில்லை என்பதைத்தான் கள நிலவரங்கள் பிரதிபலிக்கின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவேண்டிய காவல்துறை, 'நமக்கேன் வம்பு...' என்று குறட்டைவிட்டுத் தூங்கி வழிவது, ஆட்சியின் நிர்வாகத்திற னையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது. காவல்துறைக்குப் பொறுப்பான முதல்வர் விஜய்தான், தூங்கி வழியும் காவல்துறையினரைத் தட்டியெழுப்ப வேண்டும். இன்னும் தூங்கிக்கொண்டிருந்தால், சட்டம் ஒழுங்கு சிரிப்பாய் சிரிப்பதோடு, இன்னும் மோசமாகும்!

**- நன்றி**
**ஜூனியர் விகடன்**
**27.09.2026**